# உரைநடைப்பகுதி - 2 மதிப்பெண் வினா - விடைகள்

## 1. கல்வியே அழியாச் செல்வம்

**புத்தக வினாக்கள்:**

**1. அழிவில்லாத செல்வத்தை பெறவேண்டும் என்பதே மனித இயற்கை என்பதனை மறைமலையடிகளார் யாங்ஙனம் விரித்துரைக்கிறார்?**

- ❖ சில நாளில் தோன்றி சிலநாளிலிருந்து சிலநாளில் மறைந்து போவதாகிய இம்மக்களுடம்பிற் பிறந்தவர்களாகிய நாம், எந்த வகையான செல்வத்தை பெறுதற்கு முயலல் வேண்டுமென்றால்,
- ❖ என்றும் அழியாததாய் உடம்பு அழிந்தாலும் தான் அழியாமல் நமது உயிரோடு எல்லா பிறப்புகளிலும் தொடர்ந்து வருவதாய் உள்ள கல்விச் செல்வத்தை பெற முயலல் வேண்டும் என மறைமலையடிகளார் கூறுகிறார்.

**2. நாம் நிலையானவை என்று மதிக்கும் செல்வங்கள் அழியத் தக்கவையே என்பதனை மறைமலையடிகளார் எங்ஙனம் காட்டியுள்ளார்?**

- ❖ நாம் நிலையானவை என்று நினைக்கும் மாட மாளிகைகள், ஆடை அணிகலன்கள், தட்டுமுட்டுகள் முதலானவைகள் நிலையானவை அல்ல.
- ❖ எட்டாம் நூற்றாண்டில் மெசினாப்பட்டினமானது நில அதிர்ச்சியினால் அழிந்து, நீருக்கும் நெருப்புக்கும் இரையான வரலாறை நினைக்கும் போது நாம் நிலையானவை என நினைத்திருக்கும் செல்வங்களும் செல்வங்கள் இல்லை என்பதை அறியலாம் என மறைமலையடிகள் குறிப்பிடுகிறார்.

**3. கல்வியே அழியாச்செல்வம் என்பதை மறைமலையடிகளார் எவ்வாறு காட்டியுள்ளார்?**

- ❖ கல்வி வெள்ளம் வந்தாலும் அழியாது.
- ❖ தீயினாலும் வேகாது. மற்றவர்க்கு கொடுக்கக் கொடுக்கக் குறையாது.
- ❖ இத்தகைய சிறப்பான கல்வியைத் தேடாமல் அழிந்து போகின்ற பொருள்களை தேடி மக்கள் அலைகின்றனர் என மறைமலையடிகள் கூறுகிறார்.
- ❖ வேந்தராலும் கைப்பற்ற முடியாது . திருடர் குறித்த பயமும் இல்லை. காவலுக்கு மிக எளிது
- ❖ இத்தகைய சிறப்பான கல்வியைத் தேடாமல் அழிந்து போகின்ற பொருள்களை தேடி மக்கள் அலைகின்றனர் என மறைமலையடிகள் கூறுகிறார்.

**4. மக்கள், விலங்குகளினும் உயர்வுடையவர்கள் ஏன்?**

- ❖ பொதுவாக உயிர்கள் என்ற வகையில் மக்களும், விலங்குகளும் ஒப்பானவர்கள்.
- ❖ உணவு தேடுதல், தேடிய உணவை உண்டல், உறங்கல், இன்புறுதல் ஆகிய தொழில்கள் மக்களுக்கும் விலங்குகளுக்கும் உண்டு.
- ❖ ஆனால், நன்று இது, தீது இது என்ற பகுத்துணரும் அறிவைப் பெற்றிருத்தல்,
- ❖ அறிவை வளர்க்கும் நூல்களைக் கற்றல் ஆகியவற்றால் மக்கள் விலங்குகளிலும் உயர்ந்தவராய் கருதப்படுகின்றனர்.

**5. பெண்பாலார்க்கும் கல்வி இன்றியமையாததே என்னும் கருத்தினை மறைமலையடிகளார் விளக்குவது யாங்ஙனம்?**

- ❖ இவ்வுலக வாழ்வை நன்றாய் நடத்துவதற்கு ஆண்களைக் காட்டிலும் மிகுந்த பொறுமையும், நுண்ணறிவும் வேண்டியவர்களாய் உள்ளவர்கள் பெண்கள்.
- ❖ எனவே ஆண்மக்களைக் காட்டிலும் பெண் மக்கட்கு கல்வி இன்றியமையாததே என்கிறார் மறைமலையடிகள்.

**6. அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறையாக மறைமலையடிகளார் உரைப்பன யாவை?**

- ❖ அழியாச் செல்வமாகிய கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் முயலுதல் வேண்டும்.
- ❖ உயர்ந்த நூல்களில் சொல்லப்பட்டுள்ள நல்லொழுக்கங்களை நாம் பழகி வருதல் வேண்டும்.
- ❖ நாம் சிறிதும் பெருமை பாராட்டாமல் பணிவான சொல்லும் பணிவான செயலும் உடையவராய் இருத்தல் வேண்டும்.
- ❖ எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் காட்டல் வேண்டும்.

**7. ஐரோப்பாக்கண்டத்தில் நடந்த சண்டையினால் விளைந்த அழிவு குறித்து மறைமலையடிகள் கூறுவன யாவை?**

- ❖ ஐரோப்பாக் கண்டத்தில் நடந்த சண்டையினால் எங்கே பார்த்தாலும் செந்நீர் களரியும், பிணக்காடும் பீரங்கி வெடியும் கூக்குரல் ஒலியுமாய் இருந்தன.
- ❖ பல அரசர்கள், செல்வர்கள், போர்வீரர்கள் ஆகியோர் இச்சண்டையில் மாய்ந்து விட்டனர்.
- ❖ இச்சண்டையினால் நேர்ந்த அழிவுகளை அறிந்திருந்தும் நாம் இவ்வெளி ஆரவாரங்களை செல்வங்கள் என எண்ணக்கூடாது என மறைமலையடிகள் கூறுகிறார்.

**கூடுதல் வினாக்கள்:**

1. **ஔவையார் கல்வியின் சிறப்பாகக் கூறுவது யாது?**
   - ❖ மன்னர், குற்றமறக் கற்றவர் ஆகிய இருவரையும் ஒப்பிட்டு நோக்கினால் கற்றவர் மன்னரைக் காட்டிலும் சிறப்புடையவர்.
   - ❖ மன்னருக்குத் தம் தேசமில்லாமல், பிற தேசங்களில் சிறப்புக் கிடையாது.
   - ❖ ஆனால், கற்றவரோ தாம் செல்லும் தேசங்களில் எல்லாம் சிறப்பினைப் பெறுவார் என ஔவையார் கல்வியின் சிறப்பாகக் கூறுகிறார்.

2. **முற்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கிய பெண்பாற் புலவர்களைக் கூறுக.**
   - ❖ ஔவையார்
   - ❖ பூதப்பாண்டியன் பெருந்தேவியார்
   - ❖ காரைக்காலம்மையார்
   - ❖ மங்கையர்க்கரசியார்

3. **கோசல நாட்டுப் பெண்களின் பெருமைகளாகக் கம்பர் உரைப்பன யாவை?**
   - ❖ கோசல நாட்டுப் பெண்களின் பெருமையைக் கூறுகையில் கம்பர்,
   - ❖ இல்லத்தரசியராகிய பெண்கள், குறைவற்ற செல்வமும், நிறைவான கல்வியறிவும் வாய்க்கப்பெற்றவராய் இருந்தனர்.
   - ❖ அதனால், வருந்தி வந்தோர்க்கு அவர்கள் வேண்டும் பொருளும், விருந்தும் அளித்தனர் என்று குறிப்பிடுகிறார்.

4. **கல்வியின் சிறப்புகளாகத் திருவள்ளுவர் கூறுவதை எழுதுக.**
   - ❖ "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
     கற்றோரோ டேனை யவர்"
     **விளக்கம்:** கல்வியில்லாதவர்களுக்கு நுட்பமான அறிவு சிற்சில நேரங்களில் காணப்பட்டாலும் அதனை அறிவாகப் பெரியவர்கள் கொள்ள மாட்டார்கள்.
   - ❖ "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
     புண்ணுடையர் கல்லா தவர்"
     **விளக்கம்:** கல்வியுடையவர்களே கண்ணுடையவர்கள் ஆவார்கள். கல்வியறிவு இல்லாதவர்கள் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்கள் ஆவார்கள்.

## 2. வீரச்சுவை

**புத்தக வினாக்கள்:**

1. **பொருட்சுவை எத்தனை வகைப்படும்?**
   - ❖ பொருட்சுவை ஒன்பது வகைப்படும்.
   - ❖ 1. நகை 2. அவலம் 3. இழிப்பு 4. வியப்பு 5. அச்சம்
     6. வீரம் 7. வெகுளி 8. உவகை 9. சமனிலை

2. **சுவை என்பதற்குரிய விளக்கம் யாது?**
   - ❖ சுவை என்பது மெய்ப்பாடு என்றும் கூறப்படும்.
   - ❖ சுவை என்னும் தமிழ்ச்சொல்லும், ரஸம் என்னும் வட சொல்லும் ஒரே பொருள் உடையன.
   - ❖ நாவினால் நுகரப்படும் சுவை ஆறு
   - ❖ செவியால் நுகரப்படுவன குண அலங்காரங்களாகிய சொற்சுவைகளும் ஒன்பது வகையான பொருட்சுவைகளாகும்.

3. **வீரம் என்னும் சுவை குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?**
   தொல்காப்பியர்,
   - ❖ வீரம் என்பதனைப் பெருமிதம் என்னும் சொல்லால் குறிக்கின்றார்.
   - ❖ யாவரொடும் ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்றலின் பெருமிதம் என்னும் சொல்லால் வீரத்தைக் குறிக்கிறார்.
   - ❖ கல்வி, தறுகண்மை, இசை, கொடை என்னும் நான்கும் பற்றிப் பெருமிதம் பிறக்கும் எனக் கூறுகிறார்.

4. **நலங்கிள்ளியின் படைவீரத்தையும் கொடைவீரத்தையும் எவ்வாறு அறியலாம்?**
   - ❖ **நலங்கிள்ளியின் படைவீரம்:** என் ஆற்றலையும் துணிவையும் மதியாது இகழ்ந்த அறிவிலியானவன் தூங்கும் புலியை இடறிய குருடன் போலப் பிழைத்து மீளுதல் அரிது என்று கூறுவது நலங்கிள்ளியின் படைவீரத்தை நன்கு புலப்படுத்துகிறது.

- **நலங்கிள்ளியின் கொடைவீரம்:** பகைவர் என் அடியின் கீழ் ஒதுங்கி நின்று ஈயென இரப்பராயின் இந்த அரசாட்சியைக் கொடுப்பது பெரிதன்று. என் உயிரையே வேண்டினும் கொடுப்பேன் என்பது நலங்கிள்ளியின் கொடைவீரம் ஆகும்.

**5. பாரியின் படைவீரத்தையும் கொடைவீரத்தையும் எவ்வாறு அறியலாம்?**

- **பாரியின் படைவீரம்:** வேந்தர்காள்! நீவிர் மூவரும் நும் சேனையுடன் ஒருங்கு திரண்டு போர் செய்தாலும் பறம்பு மலை பற்றுதற்கரியது என்று கபிலர் கூறுவதன் மூலம் பாரியின் படைவீரம் புலப்படுகிறது.
- **பாரியின் கொடைவீரம்:** பறம்பு நாடு முந்நூறு ஊர்களை உடையது. அவற்றைப் பரிசிலர் பெற்று விட்டனர். நீவிர் கூத்தரும் பாணருமாகி ஆடிப்பாடி வரின் எஞ்சியுள்ள பறம்பு மலை நுமக்கு பரிசிலாக வேண்டினும் மாறாது வழங்குபவன் பாரி வள்ளல் எனக்கூறுவதன் மூலம் பாரியின் படைவீரத்தை அறியலாம்.

**6. முதுகுடிப்பிறந்த மகளிருக்கும் வீரவுணர்ச்சி மிகுந்திருந்தது என்பதைச் சான்றுடன் நிறுவுக.**

- **மூதின் முல்லை இலக்கணச் செய்யுள் கூறுவது:**
  "அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
  மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று" என்று மூதின் முல்லை குறிக்கும்.
- **புறநானூறு குறிப்பிடுவது:**
  நரை மூதாட்டி தன் முதுமைப்பருவத்து அருமையாய் பெற்ற ஒரு தனி மகனும் போரிலிறக்க வருந்தாது, ஈன்ற ஞான்றினும் பெரிதும் மகிழ்ந்தாள் எனப் புறநானூறு கூறுகிறது.
  தாயின் வீரமும் இப்பாடல்களிற் பொலிந்து தோன்றும். கணவனும் தமையனும் போரிலிறந்தபோதும் தன் மகனைப் போர்க்கோலம் அணிவித்து போருக்கு அனுப்பினாள் வீரத்தாய் ஒருத்தி என்று புறநானூறு கூறுகிறது.

**7. பழந்தமிழரின் படைமாட்சி குறித்து ஆசிரியர் எழுதியிருப்பன யாவை?**

- "கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும்
  ஆற்ற லதுவே படை"
- பகைவரை வெகுண்டு நோக்கிய கண் அவர் வேல் கொண்டு எறியுமிடத்து இமைத்துவிடுமாயினனும் வீரர்க்கு அதுவே தோல்வியாகுமாம்.
- தன்மீது வரும் களிற்றினை எறிதற்கு வேல் நாடித்திரியும் வீரனொருவன் தன் மார்பிலே தைத்துக்கிடந்த வேலினைக் கண்டு மகிழ்கின்றானாம்! என்னே தமிழருடைய ஆண்மை!

**8. பண்டைத்தமிழரின் போர்நெறி யாது? அதனைக் கம்பர் தன் காப்பியத்தில் எங்ஙனம் காட்டியுள்ளார்?**

- பண்டைத்தமிழரின் போர்நெறி போர்க்களத்தில் தனக்கு சமமான ஆயுதம் இல்லாத பகைவரை எதிர்த்துப் போர் செய்யாமையே ஆகும்.
- நடைபெற்ற எல்லா போர்களிலும் வெற்றியே புனைந்த அரக்கர் கோமானாகிய இராவணனை இராமனுடன் புரிந்த முதற்போரிலேயே தோல்வியுற்றான்.
- தேர் அழிந்து முடியொழிந்து வில்லும் அம்பும் இன்றி வெறுங்கையனாய் இருந்த இராவணனை நோக்கி போர் செய்வதற்கு இன்று போய் நாளை வருவாய் என்ற செய்தியைக் கம்பர் தன் காப்பியத்தில் காட்டியுள்ளார்.

**கூடுதல் வினாக்கள்:**

**1. "சமநிலை" குறித்து ந.மு.வேங்கடசாமி நாட்டார் கூறுவது யாது?**

- பொருட்சுவை ஒன்பதில் சமனிலையாவது சாந்தம்.
- ஐம்பொறியும் அடங்கப்பெற்றுப் பிறர் வையினும் வாழ்த்தினும் வாளாற்போழினும் தாளில் வணங்கினும் மனந்திரியாது அவற்றைச் சமமாகக் கொண்டு நிற்கும் நிலைமையாகும்.

**2. பண்டைத்தமிழரின் போர்நெறி பற்றி வள்ளுவர் கூறுவது யாது?**

- பகைவரை அழித்தல் சிறந்த வீரச்செயல் ஆகும்.
- ஆனால், அப்பகைவர்க்கு ஒரு துன்பம் நேர்ந்தால், அதனைப் போக்கும் வகையில் உதவி செய்தலை அவ்வாண்மைக்கு கூர்மை என்று கூறுவர்.
- பேராண்மை என்ப தறுகண் ஒன்றுஉற்றக்கால்
  ஊராண்மை மற்று அதன் எ∴கு எனக் குறள் வழியாக பண்டைத்தமிழரின் போர்நெறியை திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**3. மறவர் போரில் புறங்காட்டுதல் இல்லை என்பதற்கான சான்று தருக. (அ) தமிழரின் மானஉணர்வுக்குச் சான்று தருக.**

- வெண்ணிப்பறந்தலை என்னும் போர்க்களத்தில் சோழன் கரிகாலனோடு பெருஞ்சேரலாதன் போர் புரிந்தான்.
- சேர மன்னன் தன் மார்பிலே தைத்து உருவின புண்ணும் புறப்புண்ணாகும் என நாணினான்.

- வாளோடு வடக்கிருந்து உயிர் துறந்தான்.
- இதன் மூலம் தமிழ் மறவர் போரில் புறங்காட்டுதல் என்பது எக்காலத்துக்கும் இல்லை என உணரலாம்.

**4. சுவை-குறிப்பு வரைக.**

- சுவை என்னும் தமிழ்ச்சொல்லும் ரஸம் என்னும் வடசொல்லும் ஒரே பொருள் உடையன.
- சுவை என்பது மெய்ப்பாடு என்றும் கூறப்படும்.
- புறத்து வெளிப்படுவது அகத்துணர்வே ஆதலின் சுவைக்கு மெய்ப்பாடு என்னும் பெயர் பொருத்தமானது ஆகும்.

**5. நகை என்னும் சுவை எப்பொழுது நிகழும்?**

- பித்தனின் செயல்களைக் காணும்போது நகைச்சுவை தோன்றும்.
- நாடக அரங்கில் ஒருவன் பித்தனாய் நடிக்கும்பொழுது அவன் சொற்களைக் கேட்டால் நகை என்னும் சுவை நிகழும்.
- பித்தனின் இயல்புகளை அமைத்து நல்லிசைப்புலவர் பாடிய பாடல்களைக் கேட்டாலும் நகைச்சுவை நிகழும்.

**6. உலகத்தில் வேறு எம்மொழியிலும் காணப்படாத இலக்கணம் யாது?**

- உலகத்தில் வேறு எம்மொழியிலும் காணப்படாத இலக்கணம் பொருள் இலக்கணம் ஆகும்.
- இது அகப்பொருள் மற்றும் புறப்பொருள் என இரு பிரிவுகளையுடையது.

**7. உறுதிப்பொருள்கள் என்பன யாவை? (அ) நால்வகை உறுதிப்பொருள்கள் யாவை?**

- அறம்
- பொருள்
- இன்பம்
- வீடு

**8. தமிழரின் தலைசிறந்த பண்பு எது?**

- காதலொழுக்கம்
- வீரவொழுக்கம்

**9. தமிழரின் ஆண்மை எத்தன்மை வாய்ந்தது? (அ) தமிழரின் ஆண்மைக்கு ஒரு சான்று தருக**

- தன்மீது வரும் களிற்றினை எறிதற்கு வேல் நாடித்திரியும் வீரனொருவன் தன் மார்பிலே தைத்துக்கிடந்த வேலினைக் கண்டு அதனைப் பறித்துக் கொண்டு மகிழ்வது தமிழனின் ஆண்மை ஆகும்.

**10. தமிழ் மகளிரின் இணையற்ற வீரவுணர்ச்சிக்கு சான்றாக புறநானூறு கூறுவன யாவை?**

- தன் மகன் போரிலே புறங்கொடுத்தான் என்ற செய்தியைக் கேட்ட பெண்ணொருத்தி, சினம் கொண்டு போர்க்களத்துக்கு சென்று, தன் மகன் இருகூறாக சிதைந்து கிடத்தலைக் கண்டு பெற்ற நாளினும் பேருவகை கொண்டாள்.
- மற்றொரு வீரமகள் போரிலே கணவன் தமையனை இழந்திருந்த நிலையிலும் / தன்குடிக்கு ஆண்மகன் இல்லையென அறிந்தும் தன் ஒரே மகனின் கையில் வேலினைக் கொடுத்துச் செருமுகம் நோக்கிச் செல்க! என விடுத்தாள்.

**11. பேராண்மை குறித்து வள்ளுவர் கூறுவதை விளக்குக.**

- பேராண்மை யென்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
  ஊராண்மை மற்றதன் எ·.கு.
- பகைவர் மேற்செய்யும் வன்கண்மையைப் பேராண்மை என்று கூறுவர்.
- பகைவர்க்கு தாழ்வு வந்தபொழுது கண்ணோட்டமுடன் உதவி செய்தலை அவ்வாண்மைக்கு கூர்மை என்று சொல்வர்.

**12. வெறுங்கையனாய் நின்ற இராவணனைப் பார்த்து இராமன் கூறியது யாது?**

- அறத்தினால் அன்றி அதற்கு மாறாகிய மறத்தினால் அமர் வெல்லுதல் அமரர்க்கும் அரிது.
- இன்று போய் போர் செய்வதற்கு நாளை வருவாய் என இராமன் இராவணனைப் பார்த்துக் கூறினார்.

## 3. காளத்திவேடனும் கங்கைவேடனும்

**புத்தக வினாக்கள்:**

**1. காளத்தி வேடனாகிய கண்ணப்பரின் பெருமைகளாக மணிவாசகர் குறிப்பிடுவனவற்றை எழுதுக.**

- காளத்தி நாதனிடம் வைத்த அன்பினால் தன் கண்ணையும் பெயர்த்தெடுத்த கண்ணப்பன் புகழ், தமிழ் நாடெங்கும் பரவி நிற்கின்றது.
- எல்லையற்ற அன்பிற்குக் கண்ணப்பனே சான்று ஆயினான்.
- திருவாசகத்தில் வண்டை நோக்கிப் பாடும் நோக்கில்,
- "கண்ணப்பரை போன்று இறைவனிடம் அன்பு கொள்ளும் தன்மை என்னிடத்தும் இல்லை. எனினும் இறைவன் என்னையும் ஆட்கொண்டு இருக்கிறான்" என்று மணிவாசகர் குறிப்பிடுகிறார்.

**2. கங்கை வேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த காணிக்கைகளை கூறுக.**

**கங்கை வேடன்:**

- ஆண்டவனாகிய இராமனைக் காணச்சென்ற கங்கைவேடனாகிய குகன், தனக்கினிய கங்கையாற்று மீனையும், கொம்புத்தேனையும் உடன் கொண்டு சென்றான்.

**காளத்தி வேடன்:**

- காளத்திநாதனிடம் வைத்த அன்பினால், தனக்கினிய இறைச்சியைக் கொண்டுவந்து கோயிலில் இட்டான்.

**3. கண்ணப்பனைப் போலவே குகனும் பிரிதலாற்றவன் என்பதை விளக்குக.**

- இராமனை பிரிந்திருத்தல் பெருந்துன்பம் என்று குகன் எண்ணினான்.
- இராமனை நோக்கி, ஐயனே! நான் போகலாற்றேன். ஈண்டிருந்து என்னால் இயன்ற தொண்டு செய்வேன் என்று குகன் கூறினான்.

**4. பட்டினத்தடிகள் போற்றிய மூவர் யாவர்? இவர்தம் அருஞ்செயல்கள் யாவை?**

- பெற்ற பிள்ளையை வாளாலரிந்து இறைவனுக்கு இன்னமுது ஊட்டியவர் - சிறுத்தொண்டர்
- மனையாள் சொல்லை மீறாது இளமையிலேயே ஐம்பொறிகளை வென்றவர் - திருநீலகண்டர்
- ஆறாத அன்பினால் தன் கண்ணைப் பறித்து இறைவன் கண்களில் அப்பியவர் - கண்ணப்பர்

**5. வானர வேந்தனாகிய சுக்கிரீவன் அகங்குழைந்து பாராட்டும் இருவர் யார்?**

- கழுகின் வேந்தன் - சடாயு
- கங்கை வேடன் - குகன்

**6. இராமனை வெல்லக் கருதிப் படை கொண்டு வந்ததாகக் கருதிய கங்கைவேடனின் வீரமொழிகள் யாவை?**

- குகன் பரதனது பரந்த படையைக் கண்டு இராமனை வெல்லக் கருதிப் படை கொண்டு வந்ததாக எண்ணினான்.
- என் காவலில் அமைந்த கங்கை ஆற்றைக் கடந்து இவர் போவாரோ?
- அமர்க்களத்தில் நான் இறந்த பின்னன்றோ பரதன் இராமனைப் பார்க்க வேண்டும் என்று குகன் மொழிந்தான்.

**7. கைம்மாறு கருதாத அன்பில் கங்கைவேடனும் காளத்தி வேடனும் தலை நின்றமை யாங்ஙனம்?**

- கங்கைவேடனும் காளத்தி வேடனும் கொண்ட அன்பிற்கு சிறந்த ஒற்றுமையுண்டு.
- இருவரும் இறைவனிடம் பயன் கருதாது பக்தி பூண்டவர்கள்.
- கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன் என்று கொண்டவர்கள்.
- இத்தகைய பக்தியே சாலச்சிறந்தது எனச் சான்றோர் கூறுவர்.

**கூடுதல் வினாக்கள்:**

**1. சைவ சமயத்தை நிலைநிறுத்திய நால்வர் யார்?**

- திருஞானசம்பந்தர்
- திருநாவுக்கரசர்
- சுந்தரர்
- மாணிக்கவாசகர்

**2. இராமன் விருத்தமாதவரை தெருட்டியருளியது யாங்ஙனம்?**

- குகன் இராமனிடம் தேனும் மீனும் கொண்டு வந்து திருவமுது செய்தருள வேண்டும் என இறைஞ்சி நின்றான்.
- குகனது மனப்பான்மையை அறியாதவராய் தகாத பொருட்களை கொண்டு வந்து குகன் அபச்சாரம் செய்து விட்டான் என்றெண்ணி விருத்தமாதவர் வெறித்து நோக்கினர்.
- அன்பினால் கொணர்ந்த இப்பொருள் அமுதத்தினும் சிறந்தது என இராமன் விருத்தமாதவரை தெருட்டியருளினான்.

**3. இராமனின் கோலத்தைக்கண்டு கங்கைவேடன் மனங்கசிந்து பேசியதை விளக்குக.**
- ❖ என் பெருமானே! அயோத்தி மாநகரில் அரியாசனத்தில் மன்னர் மன்னனாய் மணிமுடி தரித்துச் செங்கோலேந்தி அரசாளும் கோலத்தில் காண வேண்டிய உன்னைச் சடைமுடியும் மரவுரியும் தரித்துக் கானகப்புல்லில் அமர்ந்திருக்கக் கண்டேனே!
- ❖ இந்தக்கோலத்தில் உன்னைக்கண்ட என் கண்களைப் பறித்தெறியாத பாவியேன் நான்! என்று குகன் மனங்கசிந்து பேசினான்.

**5. தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு - விளக்குக.**
- ❖ காட்டில் தனியாக இருந்த சீதையை இலங்கை வேந்தன் வஞ்சனையால் கவர்ந்துசெல்லும்போது, ஆதரவற்று அரற்றிய சீதையின் குரலைக் கேட்டு கழுகின் காவலன் காற்றினுங் கடுகி வந்தான்.
- ❖ அறநெறி தவறிய அரக்கனுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தான்.
- ❖ இதனால் தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு என்று சொல்லின் செல்வன் அனுமன் புகழ்ந்துரைக்கிறான்.

## 4. குடிமக்கள் காப்பியம்

**புத்தக வினாக்கள்:**

1. **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இளமையில் கேட்டதாகக் கூறும் முடிமக்கள் கதைகள் யாவை?**
- ❖ விக்கிரமாதித்தன் கதை
- ❖ மதன காமராசன் கதை
- ❖ திருவிளையாடல்கள்
- ❖ நளன் கதை
- ❖ அரிச்சந்திரன் கதை
- ❖ துரியோதனன் கதை
- ❖ இராமர் கதை போன்றன.

**2. பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த முடிமக்கள் கதைகள் முடிமக்கள் கதைகளே என தெ.பொ.மீ. கூறுவது ஏன்?**
- ❖ வரலாறு என்றால் அரசர்கள் வரலாறு அன்றி வேறொன்றும் வரலாறாக அன்று தோன்றுவதே இல்லை.
- ❖ இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், நளவெண்பா, நைடதம் என்பவையே கல்லூரியில் எப்பொழுதும் பாடமாக வரும்.
- ❖ ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் என்றால் அரசர்களைப் பற்றிய நாடகங்களே பாடமாக வரும்.

**3. உலகம் முழுவதும் கதை என்றால் முடிமக்கள் கதையாகத்தான் உள்ளது என்பதை தெ.பொ.மீ எவ்வாறு காட்டியுள்ளார்?**
- ❖ வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப்பெறுவது வான்மீகியின் இராமாயணமே. அது அரசக்குமாரர்கள் கதை.
- ❖ கிரேக்க பழங்காப்பியம் எனப் பாராட்டப்படுவது ஹோமர் எழுதிய இலியட்,
- ❖ மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியாம் ஹெலன் பெருமாட்டியைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினைப்பாடுவது.
- ❖ இலத்தீன் மொழியின் பழங்காப்பியம் வர்ஜில் என்பவர் எழுதிய ஈனிட் . இது ஈனியஸ் என்ற அரசரின் வரலாற்றைக் கூறுகிறது.
- ❖ இவ்வாறு எந்த நாட்டுப் பழங்காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரது வரலாற்றினையே பாடிப் புகழக் காண்கிறோம்.

**4. முடிமக்கள் கதையாய் சிலப்பதிகாரம் இல்லாமல் குடிமக்கள் கதையாகத்தான் இருந்திருக்கிறது என்பதனை ஆசிரியர் எங்ஙனம் விளக்கிக் காட்டியுள்ளார்?**
- ❖ குடிமக்கள் வழியாகவே தமிழ்நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள்.
- ❖ சிலப்பதிகாரத்தில் சோழன் கரிகாலன் வருகிறான். ஆனால் அவனுடைய கதை அன்று.
- ❖ பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்விடுகின்றான். ஆனால் அவன் கதையன்று.
- ❖ சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர்புரிந்து கண்ணகிக்குக் கோவில் கட்டுகிறான். இது அவன் கதையும் அன்று.
- ❖ இவ்வாறாக கண்ணகி, கோவலன் என்ற எளிய குடிமக்களை காப்பிய மாந்தராக்கி நாடகம் படைத்தமையால் சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமே ஆகும்.

**5. பழந்தமிழர் வாய்ப்பந்தல் போடவில்லை என்பதைத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் எவ்வாறு மெய்ப்பிக்கிறார்?**

- ❖ பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்று பழந்தமிழன் பாடியுள்ளது நினைவிற்கு வருகிறது.
- ❖ இப்பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடுகிறானா? உண்மையைத்தான் கூறுகிறானா? எண்ணித்தான் பார்ப்போமே! எடுத்துக்காட்டாகச் சிலப்பதிகாரமானது,
- ❖ குடிமக்களில் ஒருவர் கதை. அதிலும் ஒரு பெண்ணின் கதை. கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம்!
- ❖ கோவலன் குடிமக்களுள் ஒருவன். மாதவி பரத்தையரில் ஒருத்தி. இவர்களின் சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரம்.

**6. திருவள்ளுவரின் ஒழிபியல் பற்றி ஆசிரியரின் கருத்தை விளக்குக.**

- ❖ திருவள்ளுவர் தனது பொருட்பாலில் குடிகளது சிறப்பினைக் கடைசிப் பதின்மூன்று அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.
- ❖ திருக்குறளின் உயிர் நிலையாயுள்ள பொருட்பாலின் முடிமணியாக விளங்குவது ஒழிபியலே ஆகும்.

**கூடுதல் வினாக்கள்:**

**1. இமயத்திலிருந்து கல் எடுத்து வந்து கண்ணகிக்குக் கோயில் கட்டியவர் யார்?**

- ❖ இமயத்திலிருந்து கல் எடுத்து வந்து கண்ணகிக்குக் கோயிலைக் கட்டியவர் சேரன் செங்குட்டுவன்.
- ❖ இவரின் வீரத்தை பாடுவதே வஞ்சிக்காண்டம் ஆகும்.

**2. இளங்கோவடிகள் செய்த புரட்சி யாது?**

- ❖ முடிமக்களைப் பற்றிய வரலாற்றையே படித்துவந்த காலத்தில்,
- ❖ சிலப்பதிகாரம் என்ற குடிமக்கள் பற்றிய வரலாற்றைப் படைத்தது. இளங்கோவடிகள் செய்த புரட்சி ஆகும்.
- ❖ குடிமக்கள் வழியாகவே தமிழ்நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள்.

**3. காப்பிய பெருஞ்சுவைகள் யாவை?**

- ❖ காதல்
- ❖ அழுகை
- ❖ வீரம்

**4. சிலப்பதிகார காண்டங்கள் குறிக்கும் இலக்கியச் சுவையினை தொகுத்து எழுதுக.**

- ❖ கோவலனும் மாதவியும் வாழ்கின்ற காதல் வாழ்வே புகார்க்காண்டம்
- ❖ கணவனை இழந்த கண்ணகியின் அவலச்சுவையின் ஆழத்தைக் காட்டுவது மதுரைக்காண்டம்
- ❖ கண்ணகிக்காக எடுத்த கல்லினை வடவரசர் தலையில் ஏற்றிவந்த செங்குட்டுவனது வீரத்தைப் பாடுவதே வஞ்சிக்காண்டம்.

**5. இளங்கோவடிகள் படைத்த பாட்டாளிகளை பாடும் நூல்கள் யாவை? (அல்லது)**
**இளங்கோவடிகள் பாட்டாளிகளுக்காகச் சிலப்பதிகாரத்தில் பாடியுள்ளவை யாவை?**

- ❖ ஆய்ச்சியர் குரவை
- ❖ குன்றக்குரவை
- ❖ வேட்டுவ வரி

**6. துறவறத்தின் முடிமணியாக விளங்குபவர் யார்? எவ்வாறு?**

- ❖ துறவறத்தின் முடிமணியாக விளங்குபவர் மணிமேகலை
- ❖ பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவி மகள் மணிமேகலை துறவறத்தில் மணிமுடியாக சிறந்த பெண்மணியாய் விளங்குகிறாள்

**7. சிலப்பதிகாரத்தின் வேறுபெயர்கள் யாவை?**

- ❖ குடிமக்கள் காப்பியம்
- ❖ முதற் காப்பியம்
- ❖ முத்தமிழ் காப்பியம்

## 5. ஓய்வு

**புத்தக வினாக்கள்:**

**1. உழைத்து அலுத்தவனுக்கு ஓய்வு என்பது அடிப்படை நீதி என்பதனை அறிஞர் அண்ணா எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?**

- ❖ ஓய்வு நேரம் கிடைத்தால் தான் உழைத்து அலுத்தவன் தனது அலுப்பைப் போக்கிக் கொள்ள முடியும். மறுபடியும் பாடுபட முடியும்.
- ❖ ஓய்வு என்பது ஓர் உரிமை. வேலை செய்தவன் தன் அலுப்பைப் போக்கிக் கொண்டு, இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும் வேலையில் ஈடுபடுவதற்கான மாமருந்து.
- ❖ ஓய்வு என்பது தூக்கத்தால் உடல் அலுப்பைப் போக்கிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், மனதிற்குப் பிடித்த ஏதாவது ஒரு செயலில் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

**2. ஓய்வு நேரம் ஒவ்வொரு நாட்டிலும் எவ்வாறு அமைந்துள்ளது?**

- ❖ **ரோம் நாட்டவர்கள் ஓய்வு** : மற்போர், வாட்போர் செய்து ஆற்றலைக் காட்டிடும் வீர விளையாட்டுகளைக் காண்பதில் ஓய்வு நேரத்தை செலவிட்டனர்.
- ❖ **ஸ்பெயின் நாட்டவர்கள் ஓய்வு:** முரட்டு காளையுடன் போரிடுவது ஸ்பெயின் நாட்டவர்க்கு வீரவிளையாட்டு, ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை அவ்வாறே செலவிட்டனர்.
- ❖ **பழந்தமிழர்களின் ஓய்வு:** ஏறுதழுவுதல், மற்போர் போன்ற வீர விளையாட்டிலே நேரத்தை செலவிட்டனர்.

**3. ஓய்வு குறித்து அறிஞர் அண்ணா உரைப்பதனை எழுதுக.**

- ❖ உழைப்பினால் ஏற்பட்டுவிடும் உள்ளத்துத் தேய்வினைத் தூக்கத்தினால் மட்டும் போக்கிட முடியாது.
- ❖ மனத்துக்குத் தெம்பு தரத்தக்க விதமாக அவன் சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும்.
- ❖ ஓய்வு என்பது இழுத்துப் போர்த்துக்கொண்டு தூங்குவது மட்டுமல்ல என அண்ணா எடுத்துரைக்கிறார்.

**4. உழைப்பால் ஏற்பட்ட உள்ளத்தேய்வை நீக்கும் முறை குறித்து அண்ணா கூறுவன யாவை?**

- ❖ உள்ளத்தேய்வை நீக்க,
- ❖ உலவுவது, உரையாடுவது, பாடுவது, ஆடுவது,
- ❖ குழந்தைகளுடன் கொஞ்சுவது போன்ற செயல்களில் ஈடுபடலாம் என அண்ணா கூறுகிறார்.

**கூடுதல் வினாக்கள்:**

**1. மனதிற்கு தெம்பு தரும் செயல்களாக அறிஞர் அண்ணா கூறுவது யாவை? (அல்லது)
கண்ணும் கருத்தும் விருந்து பெறும் காட்சிகளாக அறிஞர் அண்ணா உரைப்பன யாவை?**

- ❖ சிங்கார ஓடை அதிலே பூத்துக்கிடக்கும் மலர்
- ❖ கரையினிலே ஓங்கிவளர்ந்த மரம், அதிலே குலுங்கிடும் கனி
- ❖ கனியைக் கொத்திடும் கிளி, அதனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் அணில்

**2. நாகரீகத்தின் அளவுகோல் எது?**

- ❖ ஓய்வு நேரம் - ஓய்வின் தன்மை ஆகியவற்றினைக் கொண்டு சமூகத்தின் நிலையை மதிப்பிடுகிறார்கள் அறிவாளர்.
- ❖ பெரும்பாலான மக்களுக்கு கிடைக்கும் ஓய்வே நாகரிகத்தின் அளவுகோலாகக் கொள்ளப்படுகிறது.

**3. கிரேக்கர்கள் ஓய்வுநேரத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றனர்?**

- ❖ அறிவுச் செல்வத்தை திகழ்ந்த கிரேக்கர்கள் ஓய்வு நேரத்தைக் காப்பியம் என்ற தரம்பெற்ற புதிய நாடகங்களை காண்பதிலும்,
- ❖ கருத்து பெறுவதிலும் ஓய்வு நேரத்தை செலவிட்டனர்.

**4. நடுத்தர நிலையினர் எவ்வகை விளையாட்டுகளைக் காண்பதில் பெருவிருப்பம் கொண்டுள்ளனர்?**

- ❖ காற்பந்து
- ❖ கிரிக்கட்
- ❖ ஆக்கி

## 6. சமயங்களின் பொதுநீதி

புத்தக வினாக்கள்:

**1. சமயம் என்னும் சொல்லின் பொருள் ஆழத்தைக் குன்றக்குடி அடிகளார் எவ்வாறு கூறுகிறார்?**

- ❖ மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவபடுத்தும் தத்துவத்திற்கு வாழ்க்கை முறைக்குச் சமயம் என்று பெயர்.
- ❖ மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே மதத்தின் நோக்கம் என்று குன்றக்குடி அடிகளார் கூறுகிறார்.

**2. சமயங்கள் பலவாயினும், அவற்றின் நோக்கம் ஒன்றே என்பதை அடிகளார் எவ்வாறு விளக்குகிறார்?**
- ❖ சமயங்கள் மொழியால், கடவுள் பெயரால் மாறுபடலாம். வடிவங்களால் மாறுபடலாம்.
- ❖ ஆயினும் மனிதகுலம் ஒன்றே என்ற சுருதியில் மாறுபாடுகள் இல்லை. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது என்பது சமயநியதி; நீதி
- ❖ இவ்வாறு அடிகளார் அவர்கள், சமயங்கள் பலவாயினும், அவற்றின் நோக்கம் ஒன்றே என்பதை விளக்குகிறார்.

**3. எதனை முதற்கடன் எனக் குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகிறார்?**
- ❖ உயிரினங்கள் துன்பம் நீங்கி, இன்ப அன்பினில் திளைத்து மகிழ வேண்டும் என்பதே இறைவனின் திருவுள்ளம்.
- ❖ ஆனால், உயிர்கள் நிலைத்த இன்பத்தில் மகிழ வேண்டுமாயின் இன்பம் வழங்குதலைவிட, துன்ப நீக்கம் செய்வதே முதற்கடன் என்று குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகிறார்.

**4. அன்பு என்னும் பண்பின் சிறப்பினை அடிகளார் எவ்வாறு விளக்குகிறார்?**
- ❖ அன்பு துன்ப நோய்க்கு மருந்தாகவும், இன்ப விளைவுக்கு ஊற்றுக் கண்ணாகவும் இருக்கிறது.
- ❖ அது தன்னைக் கொண்டோனையும் மகிழ்விக்கிறது. சார்ந்தோனையும் மகிழ்விக்கிறது.

**5. ஏசு பெருமானை அன்பின் திருவுருமாக அடிகளார் எவ்வாறு காட்டுகிறார்?**
- ❖ உலகின் பாவத்தை தமது செந்நீரால் கழுவிய இயேசு பெருமான் அன்பின் திருவுருவம். அவரருளிய சொற்பொழிவு அன்புப்பொழிவு.
- ❖ ஒருவரையொருவர் அன்பு கொண்டு ஒழுகுங்கள். பகைமை பாராட்டாதீர்கள். மன்னிக்கும் குணத்தினைப் பெறுங்கள்.
- ❖ எல்லோருக்கும் எப்பொழுதும் அன்பு காட்டுங்கள் என்று வையகத்தை வழி நடத்தினார்.

**6. இஸ்லாமிய மதத்தின் இணையற்ற கொள்கை என்று குன்றக்குடி அடிகளார் சுட்டுவது யாது?**
- ❖ மாந்தர் குலம் ஒன்றே என்பதும் அவர்கள் அனைவரும் ஒருகுலமாக வாழக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதுமே புனித குர்-ஆனின் உபதேசம்.
- ❖ உலகத்து உயிர்களுக்கு யாரால் அதிக இன்பம் கிடைக்கிறதோ அவர்களையே இறைவன் அதிகமாக நேசிக்கிறார் என்பது இஸ்லாமிய மதத்தின் இணையற்ற கொள்கை.

**7. மனித குலத்திற்கு உய்யும் நெறியாகப் புத்தர் எதைக் காட்டினார்?**

மனித குலத்திற்கு உய்யும் நெறியாகப் புத்தர் அன்பு நெறியைக் காட்டினார்.

**8. அன்பு பற்றிப் புத்த சமய வேதமாகிய பீடகம் கூறுவன யாவை?**
- ❖ தாய் தன் உயிருக்கு ஆபத்து வருவதையும் கருதாது தன் ஒரே பிள்ளையைப் பாதுகாப்பது போல, மனிதன் மனிதன் எல்லா உயிர்களிடமும் எல்லையற்ற அன்பு கொண்டிருக்க வேண்டும்.
- ❖ தங்கு தடையின்றிப் பகையோ விரோதமோ இல்லாமல் மனிதர் தமக்கு மேலும் கீழும் அங்கும் இங்கும்,
- ❖ அகில உலகினிடமும் எல்லையற்ற அன்பு கொண்டு வாழ வேண்டும் என்றும் புத்த சமய வேதமாகிய பீடகம் பெருமையுடன் கூறுகிறது.

**9. சமணம் எடுத்துரைக்கும் நெறியாது?**
- ❖ கருணையில்லாத மனிதனிடம் தர்மம் இம்மியளவும் இராது என்று சமணம் எடுத்துரைக்கிறது.
- ❖ மகாவீரர் பகைவனோ நண்பனோ விரோதியோ எல்லா உயிர்களையும் எல்லா மனிதர்களையும் ஒன்றுபோல் மதித்து எல்லோரையும் தாமாகக் கருதுதலே அகிம்சை என்று அருளிச் செய்துள்ளார்.

**10. அப்பரடிகளின் விழுமிய கருத்தாக அடிகளார் கூறுவன யாவை?**
- ❖ "சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு" எனத் திகழ்பவர் அப்பரடிகள்.
- ❖ அவர், ஈசன் எங்கும் இருக்கிறான் எனக் கருதியவர்.
- ❖ எல்லாரிடத்தும் அன்பு கொள்ளாதவர், சமயச் சடங்குகளாய்க் கருதப்படும் கங்கை, காவிரி முதலிய புண்ணிய ஆறுகளில் மூழ்குதலில் பயன்பெற முடியாது என்கிறார்.
- ❖ நெஞ்சில் ஓடும் வஞ்சனை ஆறு வற்றினாலே திருஅருட்புனல் பொங்கி வழியும் என்பது அப்பரடிகளின் விழுமிய கருத்தாகும்.

**11. "சமயங்களின் ஒருமித்த குரல்" என, குன்றக்குடி அடிகளார் கூறுவன யாவை?**
- ❖ சமயங்களின் ஒருமித்த குரல் அன்பு காட்டு, உதவி செய், பகையை மற, பண்பு பாராட்டு, அன்புப் புனலால் தனது மாற்றார் மனம் ஆகியவைகளைக் குளிப்பாட்டு.
- ❖ உயிர் வர்க்கத்தின் மகிழ்ச்சிப் புனலால் எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களைக் குளிப்பாட்டுங்கள் என்பதேயாகும்.

**கூடுதல் வினாக்கள்:**

**1. ரிக்வேதம் தெரிவிப்பது யாது?**

- இந்து சமயங்களுள் மிகவும் பழமையான வேதம் - ரிக்வேதம்
- எல்லா மக்களும் இணக்கமாய் வாழ்ந்து வருவீர்களாக.
- எல்லோரும் அன்புடன் உரையாடுங்கள்.
- அனைவர் உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வை நிலவச் செய்யுங்கள்.
- நீங்கள் எல்லோரும் ஒருவர் மற்றவருக்கு உதவி புரிந்து கொண்டு வாழுங்கள் என ரிக்வேதம் வழிகாட்டுகிறது.

**2. "பாச பழிமுதல் பறிப்பார் போல" – விளக்குக.**

- பாச பழிமுதல் பறிப்பார் போல எனக் கூறியவர் சேக்கிழார்.
- துன்பத்தை கூட மேலெழுந்த வாரியாக நீக்காமல், துன்பத்திற்கு காரணமான அறியாமையை உயிர்ப்பகையை அடியோடு அகற்ற வேண்டும் என்பதை விளக்கவே சேக்கிழார் "பாச பழிமுதல் பறிப்பார் போல" என்ற உவமையை கூறுகிறார்.

**3. சீனநாட்டு ஞானி கன்பூசியஸ் காட்டும் அன்பு நெறி யாது?**

- வாழ்க்கையின் மூல தத்துவமே அன்பு தான் என்று கன்பூசியஸ் குறிப்பிடுகிறார்.
- எல்லா மனிதர்களையும் விரும்புவதையும் ஒவ்வொரு மனிதரிடமும் நேசமாய் இருப்பதும் தான் அன்பு என்று கூறியுள்ளார்.

**7. திருமூலர் காட்டும் அன்பு நெறியாது?**

- தமிழ்மறை தந்த திருமூலர் பரம்பொருளாகிய சிவத்தை அன்பு என்றே குறிப்பிடுகிறார்.
- அன்போடு உருகி அகம் குழைந்தால் இறைவனை அடையலாம் என்று குறிப்பிடுகிறார்.

**8. அன்பின் சிறப்பாக அடிகளார் கூறுவதனை எழுதுக**

- அன்பு எல்லாம் வல்ல இறைவனையே மகிழ்விக்கிறது. ஆண்டவனாயினும் அவன் அன்பிற்கு அடிமையாகின்றான்.
- இரப்பாரைக் காப்பவன் இரப்பவனாக மாறுகின்றான்.

**9. வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல் குறித்து சமயங்கள் கூறுவது என்ன?**

- அன்பு எல்லாம் வல்ல இறைவனையே மகிழ்விக்கிறது. ஆண்டவனாயினும் அவன் அன்பிற்கு அடிமையாகின்றான்.
- வையத்திலுள்ள அனைவரையும் வழிநடத்தும் புதுமையைப் பொதுமையை அன்பின் சிறப்பு என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

**10. கருணை பற்றிய விவிலிய அறிவுரை யாது?**

- கருணை உள்ளவர்கள் பாக்கியவான்கள்
- அவர்கள் மீது கருணை பொழியப்படும்.

**11. அன்பு நெறி மக்கள் மன்றத்தில் நிலவ கன்பூசியஸ் சொன்ன மூல மந்திரம் என்ன?**

- கன்பூசியஸ் வாழ்க்கையின் மூல தத்துவமே அன்பு தான் என்று குறிப்பிடுகிறார்.
- உனக்கு பிடிக்காத ஒன்றை, நீ பிறருக்குப் பிடிக்குமென்று நினைந்து செய்யாதே!

**12. சுன்ஜீ - குறிப்பு வரைக.**

- கன்பூசியஸ் வற்புறுத்திய ஐந்து நற்குணங்களுள் சுன்ஜீ என்பது இரண்டாவதாகும்.
- அதாவது நாம் பிறருடன் சரியாக பழக வேண்டும், முறை தவறி பழகி நடக்கக்கூடாது, நம் உள்ளத்தில் கருணையும் அன்பும் இருக்கவேண்டும் என்பதாகும்.

**13. திருமூலர் எடுத்துக்காட்டும் சமய வழிப்பட்ட கடமைகள் எத்தனை?**

- திருமூலர் எடுத்துக்காட்டும் சமய வழிப்பட்ட கடமைகள் நான்கு
- அவற்றுள் ஒன்று கடவுளுக்குச் செய்யும் வழிபாடாகும்.
- மற்ற மூன்றும் உயிரினங்களிடம் அன்பு செய்வதே ஆகும்.

**14. சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு யார்?**

- சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு அப்பரடிகள்
- நெஞ்சில் ஓடும் வஞ்சனை ஆறு வற்றினாலேயே திருவருட்புனல் பொங்கி வழியும் என்பது அப்பரடிகளின் கருத்தாகும்.

## 7. கல்வெட்டுகள்

**புத்தக வினாக்கள்:**

**1. சிலாசாசனங்கள் எனப்படுவன யாவை?**

- ❖ கோயில்களின் கருவறையில் கருங்கற் சுவர்களின் மேல் வரிசை வரிசையாய் உள்ள எழுத்துகள் சிற்றுளி கொண்டு கல் தச்சர்களால் பொறிக்கப்பட்டனவாகும்.
- ❖ அவை கல்வெட்டுகள் எனவும் "சிலாசாசனங்கள்" எனவும் அழைக்கப்படும்.
- ❖ இது தேவர்களால் எழுதி வைத்த தெய்வ மொழி என்றும் கூறுவர்.

**2. கல்வெட்டுத்துறையால் தமிழர்க்குக் கிடைத்த நலங்கள் யாவை?**

- ❖ பல நூற்றாண்டுகளாக நாம் அறிந்துகொள்ள முடியாத நிலையில் கல்வெட்டுகளில் மறைந்து கிடந்த நம் தமிழக வரலாறு கல்வெட்டுத்துறையால் சிறிதுசிறிதாக வெளிவரத் தொடங்கியது.
- ❖ நமது பழைய வரலாற்றை நாம் அறிந்துகொள்ளுமாறு அரசாங்கத்தினர் கவ்வெட்டு இலாகா மூலம் செய்துவந்த அருஞ்செயல்கள் நம்மவர்களால் பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.
- ❖ கல்வெட்டுகள் தமிழ்மொழியில் எழுதப்பெற்றுள்ளவை என அறிய முடிந்தது.

**3. நடுகல் என்பது யாது? அதன் பயன் குறித்து எழுதுக.**

- ❖ போர்க்களத்தில் பகைவர் முன்னின்று ஆற்றலோடு அவரை எதிர்த்துப் போரிட்டு வீரமரணம் அடைந்த வீரர்களை நினைவுகூற எழுந்தவை – நடுகற்கள்
- ❖ அவ்வீரர்கள் வீரமரணம் அடைந்த இடங்களிலோ வேறு தொடர்புடைய இடங்களிலோ நடுகல் அமைத்து விழா நடத்திப் பாராட்டுவர்.
- ❖ சிறந்த வீரர்களின் நடுகற்களின் மேல் பொறிக்கப்பட்ட அவர்களுடைய பெயரும் பீடுமே நம் நாட்டில் முதலில் தோன்றிய தமிழ்க்கல்வெட்டுகள் ஆகும்.

**4. கல்வெட்டு வளர்ச்சிக்குச் சமண முனிவர்கள் எவ்வகையில் காரணமாயினர்?**

- ❖ சமண முனிவர்கள் உண்ணா நோன்பியற்றி உயிர்நீத்த இடங்களில் அவர்களின் மேல் அன்பு கொண்டவர்கள் இறந்தவர்களின் பெயர்களையும் அருஞ்செயல்களையும் பொறித்துவைத்திருந்தனர்.
- ❖ சமணமுனிவர்களின் சமாதிகளிலும் கருங்கற்படுக்கைகளிலும் கல்வெட்டு பொறிக்கப்பட்டது.
- ❖ இவ்வாறாக கல்வெட்டு வளர்ச்சிக்குச் சமண முனிவர்கள் அடிப்படை காரணமாயிருந்தனர்.

**5. கல்வெட்டுகளின் பொதுவான இயல்புகளை விளக்கி எழுதுக.**

- ❖ பொதுவாக கல்வெட்டுகளின் முதலில், 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கல வாசகமும் என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கும்.
- ❖ கல்வெட்டு தோன்றிய காலக்குறிப்பு, கல்வெட்டு செய்திகள், தொடர்புடையவர்களின் கையெழுத்து இடம் பெற்றிருக்கும்.
- ❖ அறமறவற்க, அறமல்லது துணையில்லை என்ற ஓம்படைக் கிளவிகள் இடம்பெற்றிருக்கும்.

**6. மெய்க்கீர்த்தி குறிப்பு வரைக.**

- ❖ மெய்க்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரும்முறை முதல் இராசராசனால் கி.பி.893ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ❖ மன்னனது ஆட்சியாண்டிற்கு முன் அவருடைய வீரச்செயல்களும், சிறப்புப்பெயரும் இயற்பெயரும் பொறிக்கப்படுவது பழைய வழக்கம்.
- ❖ இதோடு இல்லாமல் மெய்க்கீர்த்தியாகிய உண்மைப் புகழை அமைத்து ஆட்சி ஆண்டையும் குறித்தனர்.

**கூடுதல் வினாக்கள்:**

**1. நம் நாட்டில் பெருமளவில் கோயில்கள் இருக்கக் காரணம் என்ன?**

பண்டைய தமிழ் வேந்தர்களும் குறுநில மன்னர்களும் செல்வர்களும் பிற அன்பர்களும் தமக்குத் தொடர்புடைய நகரங்களிலும் ஊர்களிலும் தம் வழிபடு தெய்வங்களுக்குத் திருக்கோயில்கள் அமைத்து விழா நிகழ்த்த தொடங்கியமையே நம் நாட்டில் பெருமளவில் கோயில்கள் இருக்கக் காரணம் ஆகும்.

**2. கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகள் தமிழ்எழுத்துகள் என நமக்குஅறிவுறுத்திய மேலை நாட்டவர் யாவர்?**

- ❖ இராபர்ட் சிவெல்
- ❖ டாக்டர். கீலஹார்ன்
- ❖ டாக்டர் பர்னல்
- ❖ டாக்டர் பூலர்
- ❖ டாக்டர் ஷீல்ட்ஷ்

**3. தமிழகத்தில் முதலில் தோன்றிய கல்வெட்டுகள் யாவை?**
- ❖ பண்டைய தமிழகத்தில் போர்க்களத்தில் வீரமுடன் போரிட்டு வென்ற ஆண்மகனின் நினைவாக வைப்பது நடுகல் ஆகும். இதுவே தமிழகத்தில் முதலில் தோன்றிய கல்வெட்டுகள்
- ❖ இது போர்வீரர்களின் பெயரையும், ஆற்றலையும் உயர்த்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

**4. சமண முனிவர்களின் கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் யாவை?**
- ❖ செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்று
- ❖ திருநெல்வேலியில் உள்ள ஆனைமலை
- ❖ திருச்சிராப்பள்ளிக் குன்று

**5. பண்டைக் காலத்தில் நடுகல் இருந்ததாக குறிப்பிடும் நூல்கள் யாவை?**
- ❖ தொல்காப்பியம்
- ❖ அகநானூறு
- ❖ புறநானூறு
- ❖ மலைபடுகடாம்
- ❖ திருவாரூர் மும்மணிக் கோவை

**6. கல்வெட்டுகளில் விளக்கமாக குறிக்கப்பட்டிருப்பவை எவை?**
- ❖ கோயில்களின் நடைபெற வேண்டிய நாள் வழிபாடு சிறப்பு வழிபாடு
- ❖ அணிகலன்கள், வெள்ளிக்கலங்கள், செப்புக்கலங்கள் முதலியவற்றின் பெயர் மற்றும் எடைகள்
- ❖ கோயில் கோபுரம் மற்றும் மண்டபம் திருச்சுற்று மாளிகைப்படிமம் முதலியவற்றின் பெயர்கள்
- ❖ அவற்றை அமைத்தோர் பெயர்களும் கல்வெட்டுகளில் விளக்கமாகக் குறிக்கப்பட்டிக்கும்.

**7. ஓம்படைக்கிளவிகள் என்றால் என்ன?**
- ❖ கல்வெட்டுகளில் காணப்படும் அறவாசகங்கள் ஓம்படைக்கிளவிகள் ஆகும்.
- ❖ அறமறவற்க – அறமல்லது துணையில்லை போன்றவை ஓம்படைக்கிளவிகள்.

**8. கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ள அறத்தைச் சிதைப்பவர் எய்தும் பழிபாவங்களாகக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளவை யாவை?**

கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ள அறத்தைச் சிதைப்பவர்,
- ❖ கங்கையிடை குமரியிடை எழுநூற்றுகாதமும் செய்தார் செய்த பாவமும் எய்துவான்.
- ❖ இதற்குத் தீங்கு வேண்டுவான் வழி அறுக என்பனவாகும்.

## 8. தமிழக மகளிர்

**புத்தக வினாக்கள்:**

**1. மனைக்கு விளக்காகிய மகளிர் வீட்டு வாழ்க்கை சிறக்க ஆற்றும் பணிகள் யாவை?**

மனைக்கு விளக்காகிய மகளிர்,
- ❖ உயிரென விளங்கிய தம் கணவரைப் பேணுதல்,
- ❖ பெண்ணின் பெருமையாய்த் தம் திண்ணிய கற்பினைக் காத்தல்,
- ❖ மயக்குறும் மக்களை மாண்புற வளர்த்தல்,
- ❖ வருந்தி வரும் உறவினரை ஓம்புதல் முதலியன வீட்டு வாழ்க்கை சிறக்க ஆற்றும் பணிகளாகும்.

**2. கணவன் மனைவி இருவருக்கும் இடையே இருந்த உறவின் மேன்மையைத் திருவள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?**
- ❖ கணவனையிழந்த மனைவியின் வாழ்க்கை வறண்டு விடுகிறது.
- ❖ கணவன் மனைவியென்ற இருவரின் தொடர்பைத் திருவள்ளுவர்,
  "உடம்பொ டுயிரிடை யன்ன மற்றன்ன
  மடந்தையொ டெம்மிடை நட்பு" என வள்ளுவர் விளக்குகிறார்.

**3. பண்டைத்தமிழகத்தின் வறுமைக்காட்சியும் வளமார்க் குடும்பக்காட்சியும் சங்க இலக்கியத்தில் எவ்வாறு சித்திரிக்கப்பெற்றுள்ளன?**
- ❖ **பண்டைத்தமிழகத்தின் வறுமைக்காட்சி:** குழந்தையின் பசியைப்போக்க இயலாத தாய் குழந்தையின் அழுகையை நிறுத்த மறப்புலி கூறி பயமுறுத்துகிறாள்.
- ❖ **பண்டைத்தமிழகத்தின் வளமார் குடும்ப காட்சி**: பெற்ற தாய் ஒரு புறமிருக்க, வளர்ப்புத்தாய் தேன் கலந்த பால்சோற்றினை பொற்கிண்ணத்தில் வைத்து சிறுகோலோச்சி அச்சுறுத்துவதால் பசியில்லா அக்குழந்தை உண்ண மறுத்து தோட்டப்பந்தலின் முன்னும் பின்னும் ஓடியாடும்.

**4. தமிழக மகளிர் சிறந்த கலைஞர்களாய் விளங்கினர் என்பதனைச் எங்ஙனம் அறியலாம்?**
- ❖ கலையுணர்ச்சி பொருந்த தம்மை ஒப்பனை செய்து கொள்வர்.
- ❖ தாய்மார் வீட்டுப்பொருள்கள், தோட்டப்பொருள்களான தென்னை, பனை முதலியவற்றின் இளங்காய்கள் கொண்டு சிறுதேர் முதலியன சிறார்க்குச் செய்து கொடுத்தனர்.

**5. இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வை நடத்தினர் தமிழக மகளிர் என்ற கருத்தை விளக்குக.**
- ❖ பருவ மகளிர் காற்றோட்டமுள்ள பரண்மீதிருந்து பயிர் காத்தனர்.
- ❖ ஆடவரும் மகளிரும் முழுமதி நன்னாட்களிலும் மாலைநேரத்திலும் குரவை கூத்தாடினர்.
- ❖ இதன் வாயிலாக பண்டைய தமிழக மகளிர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர் என்பது புலப்படுகிறது.

**6. அறிவும் ஆற்றலும் அஞ்சாமையும் பெண்பாலரிடம் மிக்கிருந்தன என்பதற்கு எடுத்துக்காட்டான நிகழ்வுகள் யாவை?**
- ❖ நாடு விட்டு நாடு சென்று நயம்பட தூதுரைத்தார் ஔவை மூதாட்டியார்.
- ❖ வழக்கறிஞர் துணை நாடாது, மன்னனது மாபெரும் மன்றத்திலும் வழக்கை தானாகவே திறம்படக் கூறிய கண்ணகியின் சொல்வன்மை போற்றுதற்குரியது.

**கூடுதல் வினாக்கள்:**

**1. குடும்பத்தலைவியின் முதற்கடமை என்று ஆசிரியர் கூறுவது யாது?**
- ❖ அலுத்து வந்த ஆருயிர் கணவனுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்வது குடும்பத்தலைவியின் முதற்கடமையாகும்.
- ❖ தான் சமைத்ததை இனிது! இனிது! எனக் கணவன் சுவைத்து உண்பதைக் கண்டு மனைவி மனம் மகிழ்வாள்.

**2. பண்டைய தமிழக மக்களின் இறைவழிபாட்டு முறையை நெடுநல்வாடை எவ்வாறு குறிப்பிடுகிறது?**
- ❖ சிவன், திருமால், குமரவேள், புத்தர் ஆலயங்கட்குச் சென்று வழிபட்டனர்.
- ❖ வீட்டிலும் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி வழிபட்டனரென நெடுநல்வாடை கூறுகிறது.

**3. கணவனைப் பேணுதல் குறித்த உவமைகளைக் கூறும் நூல்கள் யாவை?**
- ❖ திருக்குறள்
- ❖ நற்றிணை
- ❖ குறுந்தொகை

**4. ஊடல் தீர்க்கும் வாயிலாக தொல்காப்பியனார் எதனைக் குறிப்பிடுகிறார்?**
- ❖ ஊடல் தீர்க்கும் வாயிலாக தொல்காப்பியனார் குறிப்பிடுவது விருந்தோம்பல் ஆகும்.
- ❖ இல்வாழ்வாளின் இனிமையான கடமைகளுக்குள்ளே விருந்தோம்பல் மிகவும் சிறப்பனது ஆகும்.

**5. மகளிர் சிறந்திருந்த கலைத்துறைகள் யாவை?**
- ❖ ஓவியம் தீட்டல்
- ❖ காவியம் புனைதல்
- ❖ ஆடல், பாடல்

**6. நூல் நூற்பு, ஓலை வேலை என்பதை விளக்கும் சொற்றொடர்கள் யாவை?**
- ❖ நூல் நூற்பு என்பதை விளக்கும் சொற்றொடர்: பருத்திப் பெண்டிர்
- ❖ ஓலை வேலை என்பதை விளக்கும் சொற்றொடர்: இரும்பனங்குடை

**7. மகளிர் ஈடுபடும் விளையாட்டுகள் யாவை?**
- ❖ பாவை விளையாட்டு
- ❖ அலவன் விளையாட்டு
- ❖ மணல் வீடு கட்டல்
- ❖ சிப்பி விளையாட்டு

**8. நாடு விட்டு நாடு சென்று நயம்பட தூதுரைத்தவர் யார்?**
- ❖ நாடு விட்டு நாடு சென்று நயம்பட தூதுரைத்தவர் ஒளவை மூதாட்டியார்.
- ❖ இவ்வாறாக பண்டைய தமிழக மகளிர் கல்வியுடன் மற்றும் வீரத்திலும் சிறந்து விளங்கினர்.

**9. பகைவனைப் பாராட்டும் பண்பு காணப்பட்ட பெண்பாற்புலவர் யார்?**
- ❖ பகைவனைப் பாராட்டும் பண்பு காணப்பட்ட பெண்பாற்புலவர் வெண்ணிக்குயத்தியார் ஆவார்.
- ❖ புறநானூற்றில் உள்ள பாடல் இவரின் அறிவையும், ஆற்றலையும், அஞ்சாமையையும், நடுவு நிலைமையையும் எடுத்துக்காட்டுவதாய் உள்ளது.

**10. துறவுக்கும் தொண்டுக்கும் எடுத்துக்காட்டாய் திகழ்ந்தவர் யார்? எவ்வாறு?**
- ❖ தன்னலங்கருதாது மக்கள் நலங்கருதி மக்கள் தொண்டாற்றிய மணிமேகலை துறவுக்கும் தொண்டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டு.
- ❖ தனிவாழ்க்கை தானாகவே அமைந்துவிட்ட கன்னிப்பெண்டிரும் தயங்காது தொண்டாற்ற முன்வரலாம் என்பதைக்காட்டும் அவளது அரிய வாழ்வு.

**11. ஆடவரைப்போல் முதுகுடி மகளிருக்கும் வீரவுணர்ச்சி உண்டு என்பதைக் கூறும் நூல் எது? துறை எது?**
- ❖ ஆடவரைப்போல் முதுகுடி மகளிருக்கும் வீரவுணர்ச்சி உண்டு என்பதைக் கூறும் நூல் மூதின் முல்லை என்ற இலக்கணச் செய்யுள்.
- ❖ இவ்விலக்கணக்கத்திற்கு இலக்கியமாண் எண்ணிறந்த பாடல்கள் புறநானூற்றில் உண்டு.

**12. பெண்களின் வீரவுணர்ச்சிக்கு சான்றாய் புறநானூறு கூறுவது என்ன?**
- ❖ கணவனும் தமையனும் போர்க்களத்தில் இறக்க, மைந்தனைப் போர்க்கோளம் புனைவித்து போருக்கு அனுப்பிய தாயின் வீரமும்,
- ❖ நரைமூதாட்டி தன் முதுமைப்பருவத்து அருமையாய் பெற்ற ஒரு தனிமகனும் போரிலிறக்க வருந்தாது, ஈன்ற ஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரமும் பெண்களின் வீரவுணர்ச்சிக்கு சான்றுகளாம்.

**தயாரிப்பு**
**திரு. த. செல்வேந்திரன் முதுகலை பட்டதாரி ஆசிரியர்**
**அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர், திருச்சி**

**தயாரிப்பில் உதவி**
**திருமதி. நா. தேவிகா சுரேஷ் MA., B.Ed., P.G.D.C.A.,**
**வெற்றிக்கு வழி ஆசிரியர் குழு**